இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 10 – சனிக்கிழமை 26 ஜூலை 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 346 : Thiruvalluvar Year - 2056 - Aadi 10 - Saturday 26 July 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00

## மாணவச் செல்வங்கள் – ஆசிரியப் பெருமக்களுக்கான திராவிட மாடல் அரசின் சாதனைப் பட்டியல் நீளமானது!

# பள்ளிக் கல்வியை மேம்படுத்த மேலும் திட்டங்கள் தொடரும் - வளரும்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிய விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித் துறைக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், அ.வெற்றி அழகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் மற்றும் பொது நூலகத் துறை இயக்குநர் திருமதி எஸ்.ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி. முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் பெ. குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ. நரேஷ், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஜூலை 26-

**பள்ளிக் கல்வித்துறை சார்பில் 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்த விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், மாணவச் செல்வங்கள், ஆசிரியப் பெருமக்களுக்கான திராவிட மாடல் அரசு நிறைவேற்றியுள்ள சாதனைப் பட்டியல் நீளமானது எனவும், பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் இன்னும் வளரும்... தொடரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து, 6 முதல் 9 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான "திறன்" (THIRAN Targeted Help for Impro ving Remediation & Academic Nurturing) இயக்கத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகங்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

மேலும் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்குக் கணினிசார் அடிப்படை அறிவியலையும், செயற்கை நுண்ணறிவுத் திறன் மற்றும் அதனைப் பயன்படுத்தும் நுட்ப அறிவியலையும் கற்பிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள TNSPARK (Tamil Nadu School Programme for Artificial Intelligence, Robotics and Knowledge of Online Tools) என்ற புதிய பாடத்திட்ட பாடநூல்களை வெளியிட்டார்.

**இந்த விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

இந்த இனிய விழாவில் பங்கேற்று, இடைநிலை ஆசிரியர்களுக்கு நானே நேரில் பணிநியமன ஆணைகள் வழங்க வேண்டும் என ஆவலாக இருந்தேன். ஆனால், சிறிது உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவர்கள் ஓய்வெடுக்குமாறு கூறிய அறிவுரையின் காரணமாக, இந்த விழாவில்பங்கேற்க இயலாமல்போனது வருத்தமளிக்கிறது. நிகழ்ச்சிக்கு நேரில் வர இயலாமல் போனாலும் எனது எண்ணமெல்லாம் உங்களைக் குறித்தே உள்ளது.

### ஆசிரியர்கள் மீது முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டிருந்த அளப்பரிய அன்பு!

**முத்தமிழறிஞர் கலைஞர் ஆசிரியர்கள் மீது கொண்டிருந்த அளப்பரிய அன்பையும், பரிவையும், ஆசிரியர் சமூகம் என்றென்றும் மறக்காது. அதே வழியில் நமது "திராவிட மாடல்" அரசும் ஆசிரியர்களின் நலம் பேணி, அதன் மூலம் மாணவச் செல்வங்களின் அறிவு வளம் பேணும் பணியை ஆற்றி வருகிறது. அதன் ஒரு பகுதியாகத் தான் பள்ளிகளில் காலியாக உள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.**

### சிந்தனை வளமிக்க தலைமுறையை உருவாக்கும் ஆகச்சிறந்த ஆசிரியர் பணி!

பள்ளிகள் என்ற சமுதாயத்தின் அறிவு நாற்றங்கால்களைப் பாதுகாத்து, பேணி வளர்த்து எதிர்காலத்திற்கான சிந்தனை வளமிக்க தலைமுறையை உருவாக்கும் ஆகச்சிறந்த பணிதான் ஆசிரியர் பணி.

ஆசிரியர்களை முன்மாதிரி ஆளுமைகளாகக் கொண்டுதான் மாணவர்கள் தங்களது எதிர்காலத்திற்கான இலக்குகளையும், கனவுகளையும் உருவாக்கிக் கொள்கிறார்கள். அத்தகைய மகத்தான ஆசிரியர் சமூகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குமான உறவு என்பது அரசியலையும் தாண்டிய நெருக்கத்தையும், பிணைப்பையும் கொண்டதாகும்.

### பள்ளிக் கல்வியை மேம்படுத்த புதுமைத்திட்டங்களை செயல்படுத்தும் அரசு!

முத்தமிழறிஞர் கலைஞர் ஆசிரியர்கள் மீது கொண்டிருந்த அளப்பரிய அன்பையும், பரிவையும், ஆசிரியர் சமூகம் என்றென்றும் மறக்காது. அதே வழியில் நமது "திராவிட மாடல்" அரசும் ஆசிரியர்களின் நலம் பேணி, அதன் மூலம் மாணவச் செல்வங்களின் அறிவு வளம் பேணும் பணியை ஆற்றி வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் பள்ளிகளில் காலியாக உள்ள 2,457 இடைநிலை ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் இன்று வழங்கப்படுகின்றன.

பிற்போக்குத்தனமான, அறிவியல் அணுகுமுறைகளுக்கு எதிரான புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித்துறைக்கான நிதியை ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்க மறுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மற்றும் பஹல்காம் விவகாரம்; சோனியாகாந்தி தலைமையில்

## நாடாளுமன்றத்தில் 4வது நாளாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

### மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைப்பு!



புதுடெல்லி, ஜூலை 26-

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் குடியரசு துணைத் தலைவர் ராஜினாமா விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினமும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பினர். இதனால் ஏற்பட்ட அமளியால் மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. திருமதி சோனியா காந்தி தலைமையில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. முதல் நாளில் இருந்தே பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க அனுமதி கோரி எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இதனால் இரு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 4வது நாளாக நேற்று முன்தினமும் அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவை நேற்று முன்தினம் கூடியதும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம், பஹல்காம் தீவிரவாத தாக்குதல், குடியரசு துணைத் தலைவர் ராஜினாமா விவகாரம் தொடர்பாக விவாதிக்க அனுமதிக்கக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்பினர். இதனால் மக்களவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து, தொடங்கிய சில நிமிடங்களிலேயே மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையிலும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம், பஹல்காம் தீவிரவாத தாக்குதல், குடியரசு துணைத் தலைவர் ராஜினாமா விவகாரம் தொடர்பாக குரல் எழுப்பப்பட்டது. இதனால் அங்கும் அமளி நிலவியது. சிறிது நேர அமளிக்கு பிறகு, நேற்று முன்தினத்துடன் ஓய்வு பெறும் எம்.பி.,க்களை பாராட்டி வழியனுப்பும் நிகழ்வு நடைபெற்றது. இதன்பின்பு மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## அதிக தொழிற்சாலைகள் கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு!

### ஆர்.பி.ஐ. ஆய்வறிக்கையில் தகவல்!

புதுடெல்லி, ஜூலை 26–

நாட்டிலேயே அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது. ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை நோக்கி தமிழ்நாடு வெற்றிகரமாக பயணிப்பதாக ஆர்.பி.ஐ. ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் இந்தியாவில் 2 லட்சத்து 53 ஆயிரத்து 334 தொழிற்சாலைகள் இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 39 ஆயிரத்து 666 தொழில்சாலைகள் தமிழ்நாட்டில் இருப்பதாகவும், அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது இந்தியாவின் ஒட்டுமொத்த தொழிற்சாலைகளில் 16% தமிழ்நாட்டில் உள்ளன. 31 ஆயிரத்து 31 தொழிற்சாலைகளுடன் குஜராத் இரண்டாவது இடத்திலும், 25 ஆயிரத்து 610 தொழிற்சாலைகளுடன் மகாராஷ்டிரா 3வது இடத்திலும் உள்ளன.

அதிக தொழிற்சாலை மட்டுமின்றி, அதிக வேலைவாய்ப்புகளை வழங்கும் மாநிலங்களின் பட்டியலிலும் தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ஒரு லட்சம் கோடி டாலர் பொருளாதார இலக்கை நோக்கி தமிழ்நாடு வெற்றிகரமாக பயணிப்பதாகவும் ஆர்.பி.ஐ ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல்களைத் திருடும் தேர்தல் ஆணையம்!

### மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஜூலை 26-

இந்தியாவில் தேர்தல் ஆணையம் மூலம், தேர்தல்கள் திருடப்படுகின்றன என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

டெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி, மகாராஷ்டிராவை போன்று, பீகாரிலும் வாக்குகள் திருடப்படுவதாகவும், இந்திய தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வுக்கு துணை போவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இந்தியாவில் தேர்தல் ஆணையம் மூலம், வாக்காளர்களின் வாக்குகள் களவாடப்படுவதாக கூறிய ராகுல் காந்தி, இது தொடர்பான ஆதாரங்களை விரைவில் வெளியிடுவோம் என்று தெரிவித்தார்.